DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–164/2022

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திரு.மரியஜெபமாலை | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused absent. Petiton U/s.317 Cr.P.C. filed and allowed)

25.09.2025– 03.10 PM

முதல் விசாரணை:–

1. நான் சாயல்குடி விவிஆர் நகரில் குடியிருந்து குளிர்பான வியாபாரம் செய்து வருகிறேன். எதிரியை சம்பவத்திற்கு முன்பு தெரியாது. ஆனால் சம்பவத்தன்று பார்த்துள்ளேன். சம்பவத்தன்று என்னை அடித்து தகராறு செய்தவர் என்ற முறையில் தெரியும். எதிரியை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும்.

2. கடந்த 2020ம் ஆண்டு கொரோனா காலத்தில் ஒரு நாள் வியாபாரம் சம்மந்தமாக மூக்கையூர் சென்றிருந்தேன். வடக்குமூக்கையூரில் ஒரு கோவில் அருகில் உள்ள கடையில் கூல்ட்டிரிங்ஸ் பாட்டில்கள் சப்ளை செய்தேன். வழியில் ஒரு நபர் என்னை மறித்தார். என்னிடம் என்ன பொருள் விற்பனைக்கு கொண்டு வந்துள்ளாய் என்று கேட்டார். நான் ரஸ்னா கொண்டு வந்துள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அந்த நபர் ரசமா என்று கேட்டார்.

3. நான் திரும்பவும் அந்த நபரிடம் ரசம் இல்லை ரஸ்னா என்று சொன்னேன். நான் அங்கிருந்து கிளம்பிக்கொண்டிருந்த போது 10 அடி துாரத்தில் இருந்த இன்னொரு நபர் பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த பூவரசன் என்பவரும் வந்து இருவரும் என்னை கம்பால் அடித்தார்கள். எனக்கு தலையில் காயம்பட்டது. அந்த இடத்தில் இருந்த நபர்கள் சண்டையை விலக்கிவிட்டார்கள். விலக்கிவிட்டவர்கள் அங்கிருந்து என்னை செல்லுமாறு

சொன்னதால் அங்கிருந்து கிளம்பி வந்து சாயல்குடி காவல் நிலையம் சென்றேன்.

4. நான் என்னை தாக்கிய நபர்கள் மீது புகார் அளித்தேன். போலீசார் என்னை சிகிச்சைக்காக கடலாடி மருத்துவமனைக்கு செல்ல அறிவுறுத்தியதன் பேரில் கடலாடி மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை பெற்றேன். மறுநாள் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனை சென்று தலையில் ஏற்பட்ட காயத்திற்கு சி.டி. ஸ்கேன் எடுத்து பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.

5. பின்னர்அந்த ஊரில் விசாரித்தபோது என்னை அடித்து தாக்கிய நபர்கள் அதே வடக்கு மூக்கையூரைச் சேர்ந்த பீமஇருள் மற்றொரு நபர் பூவரசன் என்று சொன்னார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி